1971 ஜூலை 17]

அறநிலையங்களின் வருமானம்.

*297 வினு.—திரு. என். கிட்டப்பா :
திரு. ச. சங்குமுத்து தேவர் :
திரு. கே. என். குமாரசாமி :
திரு. சி. கணேசன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோயில்கள், மடங்கள், ஆதினங்கள், ஆகியவற்றின் நிகர வருமானத் தொகையினை கல்வி, மருத்துவமனை போன்றவற்றிற்கு செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அறநிலையங்களிலுள்ள உபரிநிதியை கல்வி நிலையங்கள், மருந்தகங்கள் இவற்றை அமைத்தல், பேணுதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை. இது பற்றிய செயற் குறிப்புகள் கிடைக்கும் போதெல்லாம் தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின்படி சென்னை, இந்து சமய அறக்கட்டளை ஆணையாளர் அவ்வாறு தொகையினை மாற்றிப் பயன்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரமுள்ளவராவார்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தக் கோயில்கள், மடங்கள், ஆதீனங்கள் ஆகியவற்றிற்காகத் தேவைப்படுகின்ற நியாயமானத் தேவைகள் போக எஞ்சியுள்ள நிகர வருமானத்தில் கண்டிப்பாக ஒரு குறிப்பிட்ட சதவிதத்தை பள்ளிகூடங்கள், மருத்துவ மனைகள் போன்றவற்றிற்காகப் பயன்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : உள்ள சட்டத்தின்படி 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 66-வது பிரிவின்படி சில நோக்கங்களுக்காக நாம் நிதியைப் பயன்படுத்தி வருகிறோம். ஏற்கெனவே கல்வி நிலையங்களுக்காகவும் மருத்துவ மனைகளுக்காகவும் அந்த நிதியை நாம் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, கோயில்களிலே இருந்து ஏராளமான நிதி கிடைக்கிறது. அந்த நிதியைக் கொண்டு கோயில்களுக்கு வரும் மக்களுக்காக, கோயில்கள் இருக்கும் பகுதிகளில் ஆஸ்பத்திரி ஒன்றை உண்டாக்குவதன் மூலம் வருகின்ற மக்களுக்கு உடல்நலக் குறைவாகயிருந்தால் அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகளை அதன்மூலம் செய்ய முடியும். அப்படிப்பட்ட ஏற்பாடுகளை அரசாங்கம் வருமானமுள்ள கோயில்கள் இருக்கும் பிரதேசங்களில் ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நிதி வசதி இருக்கின்ற ஆலயங்களிலிருந்து தற்பொழுது 11 சித்த வைத்திய மருத்துவ மனைகளை நடத்திக் கொண்டு வருகிறோம். வரும் ஆண்டுகளில் அதிகப்படியாக நடத்த ஏற்பாடுகளை அறநிலையத்துறை எடுத்துக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பது குறிக்கும்.]

2. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண் 12—காவல் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நிதிக் கோரிக்கையின் மீது விவாதம். பதின்மூன்றும் நாள். கோரிக்கை எண். 12—காவல் துறை.

மாண்புமிகு திரு. மு கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை எண். 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,91,04,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் ".

திரு. எ. சுவாமிதாஸ் : போலீஸ் நிர்வாகத்தில் எல்லோருக்கும் சமநீதி கிடைக்க ஏற்பாடு செய்வதைப்பற்றி விவாதிக்க. I move the cut motion standing in my name, namely,

" That the allotment of Rs. 18,91,04,300 under Demand No. 12—Police—be reduced by Rs. 100 ".

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, காவல்துறை நிர்வாகத்தில் வெளியார் தலையிடுவதைத் தடுப்பதுபற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,91,04,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need for the issue of instructions to all the police stations to take impartial action irrespective of political considerations whenever complaints are brought to police stations, I move the cut motion standing in my name, namely,

" That the allotment of Rs. 18,91,04,300 under Demand No. 12—Police—be reduced by Rs. 100 ".